
CFM/L/90 40




தொழு நோயினை
ஆரம்பத்திலேயே கண்டறிந்து
குணப்படுத்துவோம்.



1. தொழுநோய் என்றால் என்ன?

- மைக்கோ பக்டீரியம் லெப்ரே (Micobacterium laprae) எனப்படும் ஒரு-வகை பக்டீரியாவினால் ஏற்படும் நோயாகும்

2. இந்நோயின் அறிகுறிகள் என்ன?

- தோலின்மேல் காணப்படும் வெளிறிய நிற மாறுபட்ட தடங்கள் இந்நோயின் ஆரம்ப அறிகுறியாகும். இப்படியான தடங்கள் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டதாக இருக்கலாம்.

- இத் தடங்கள் பொதுவாக உணர்ச்சியற்ற தடங்களாக காணப்படும் ஆனால் முகத்தில் ஏற்படும் இவ்வாறான தடங்கள் பொதுவாக உணர்ச்சியானவை.

- இதற்கு மேலதிகமாக தோல் தடித்தும் காணப்படலாம்.

- காலதாமதமாகும்போது சுற்றயல் நரம்புத் தொகுதியில் இந்நோய் ஏற்படுவதால் நரம்பியல் பாதிப்புகள் ஏற்படலாம்.

- மிகவும் குறைந்தளவிலான தாமதமாக வரும் நோயாளர்களின் கால்களில் உணர்ச்சி நரம்பு பாதிப்படைவதால் பாதங்களில் மீண்டும் மீண்டும் புண்கள் தோன்றலாம். (இப் புண்கள் சலரோகத்தில் ஏற்படும் புண்களைப் போன்றது)

- நீண்டகாலமாக சிகிச்சை பெற்றும் குணமாகத தேமல்களாக இருப்பின் அவையும் தொழுநோயாக இருக்கக்கூடிய சாத்தியக்கூறு உண்டு.

3. இந்நோய் இன்னொருவரிற்கு தொற்றக் கூடிய சந்தர்ப்படும் உண்டா?

- ஆம்

- நோய்த்தொற்றுள்ளவர் இருமும் போதோ தும்மும் போதோ சுவாசத் தொகுதயில் இருந்து சுற்றாடலிற்கு வெளிவரும் காற்றுத்துளிகள் உள்ள பக்டீரியா இன்னொருவரை அடைவதனால் அவரிற்கு நோய்த்தொற்று ஏற்படும்.

4. அனைத்து நோய்களும் தொற்றக்கூடியதா?

- இல்லை

- தொழுநோய் இரண்டுவகைப்படும்.
  தொற்றாதவகை (Pauci bacillary)
  தொற்றக் கூடியவகை (Multi bacillary)

ல்

- இதில் Multibacillary வகை மட்டுமே ஒருவரிற்கு தொற்றக்கூடியது. ஆயினும் பொருத்தமான பக்டீரியாகொல்லி சிகிச்சையை நோயாளி பெறும்போது 7 நாட்களின் பின்னர் நோயாளியிடம் இருந்து இன்னொருவரிற்கு நோய்த்தொற்று ஏற்படாது.

5. தொழுநோயினை பரப்பும் பக்டீரியா உடலினுள் செல்லும் அனைவரிற்கும் நோய் ஏற்படுமா?

- இல்லை

- உலகின் எல்லாப் பகுதியிலிருக்கும் 90% மக்களிற்கு பிறப்பிலிருந்தே தொழுநோய்எதிர்ப்புச் சக்தி உள்ளது. எனினும் உலகிலுள்ள மக்களில் 10% களுக்கு மட்டுமே நோய்த்தொற்று ஏற்படும்.

6. தொழு நோயினை குணப்படுத்துவதற்கு சிகிச்சைமுறை உண்டா?

- ஆம்

- நோயின் வகையினைப்பொருத்து 6 மாதமோ அல்லது ஒரு வருடமோ தொடர்ச்சியாக பக்டீரியா கொல்லிகளைப் பயன்படுத்துவதன் மூலம் இந்நோயினை பூரணமாக குணமாக்கலாம்.

7. தொழுநோயிற்கான மருந்துகளை ஒருவர் உள்ளெடுக்கும்போது ஒருவரிற்கு ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்படுமா?

- பக்கவிளைவுகள் சில ஏற்படலாம். ஆனால் இந்தப் பக்கவிளைவுகள் பாரதுாரமானவை அல்ல. அதனால் பயப்படதேவையில்லை.

- ஒவ்வொருமாதமும் முதல்நாளில் எடுக்கும் ஒருவகை மருந்தினால் (Rifampicin) சிறுநீர் சிவப்புநிறமாக வெளியேறும் இது பயப்படவேண்டிய பக்க விளைவு அல்ல.

- தொற்றுவகையுடைய நோயாளர்கள் பாவிக்கும் ஒரு மருந்துவகையினால் (Clofazamine) சிலரிற்கு தோலின் நிறம் மாற்றமடையக்கூடும்.

- சிகிச்சை முடிவடைந்ததும் தோலின் நிறம் பழைய நிறத்தை அடையும்.

8. உடனடியாக வைத்திய ஆலோசனையை பெற வேண்டிய சந்தர்ப்பங்கள் எவை?

- சிகிச்சையின் போது கண்கள் மஞ்சள் நிறமாக மாறுதல்.

- சிறுநீர் மஞ்சள் நிறமாக மாறுதல்.

- பசியின்மை

- மெல்லிய காய்ச்சல்

ஒருவர்
தேனும்

டுக்கும்
1)
இது
அல்ல.

நிறம்

ன் நிறம்

னயை
வை?

சள்

## தொழுநோய்

- இது முற்றாக குணப்படுத்தக்கூடிய ஒரு நோயாகும்
- சருமத்தில் தோன்றும். உணர்ச்சியற்ற தடங்கள் இந்நோயின் ஆரம்ப அறிகுறிக-ளாகும்.
- ஆறு மாத முதல் ஒரு வருடம் வரை இடைவிடாது பொருத்தமான சிகிச்சையை பெறின் குணப்படுத்தலாம்
- வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவோ தனிமைப்படுத்தப்படவோ தேவையில்லை.
- சிகிச்சையை பெற்று 3 தினங்களின் பின்னர் இன்னொருவரிற்கு நோயினைப் பரப்பும் திறன் இழந்துவிடுகிறது
- தொற்றும்வகை நோயுள்ளவர்களுடன் பழகினாலும் 90% மானவர்களுக்கு இந்நோய் ஏற்படாது
- நோயின் தொடக்கத்தில் சிகிச்சைபெறின் அங்க விகாரங்களை தடுக்கலாம்

தயாரிப்பு ஆலோசனை
மருத்துவர்S.சுகுமாரன் (தோல் சிகிச்சை நிபுணர்)
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

தயாரிப்பு உதவி
M.P.F..நுஸ்ரா
2008/FM/114